# DIRECTORATE OF HIGHER AND TECHNICAL EDUCATION

## ACHIEVEMENTS/NOTABLE ACTIVITIES FROM ***01.04.2017 to 31.03.2018***

- Under the PerunthalaivarKamarajar Financial Assistance Scheme an amount of Rs. 24.11 Crore has been spent and 4219 *(Medical (688), Engineering (3371) and Nursing(160))* students have been benefited during the financial year 2017-18.

- In order to improve the quality of Higher Education in Government institutions, an Academic and Administration Audit Committee has been constituted during June, 2017 to assess and grade the colleges every year. The Committee has inspected all the 21 Colleges and the Inspection Report submitted to Govt.

- In order to fulfill the demand from both the students and parents to increase the intake of seats in admission in Arts and Science Colleges in the U.T. of Puducherry, this administration has taken steps and increased 1069 and 159 seats in Under Graduate courses and Post Graduate courses respectively in various Government and Society run Arts and Science colleges for this academic year (2017-18) in order to enable large number of students to pursue their desired courses. In this, considering the huge demand, 566 seats were increased in Bhararthidasan Govt. College for Women, Puducherry and the shift system is also introduced in this academic year.

- UPSC has notified 147 candidates out of our request of 159 towards the vacancies of teaching staff in Govt. colleges and 116 candidates were issued posting orders and 89 of them were joined the Colleges during the year 2017-18.

- As an innovative measure, the Mentor system has been introduced from the month of Nov 2017 in the 10 Govt and Society. Colleges (Arts & Science, Engineering, Polytechnics and Law) in the Puducherry region, by which each faculty member should adopt 10-15 students thereby guiding them to improve their academic performance, developing the communication skills, inculcating the good habits, addressing the issues which hinders their overall performance etc.

- Three new courses namely M.Sc(Chemistry), M.Sc (Maths) and M.Sc (Computer Science) were started at Arignar Anna Arts and Science College, Karaikal from this academic year 2017-18.

- Construction of Academic block for Avvaiyar Govt. College for Women, Karaikal with an estimate of Rs.2.38 Cr. is nearing completion.

- Construction of new building for Rajiv Gandhi Arts and Science College, Thavalakuppam, Puducherry with an estimate of Rs.1.00 Cr. released under the MPLAD fund is nearing completion.

- Construction of Academic block for Dr. SRK Govt. Arts College, Yanam with an estimate of Rs.3.01 Cr. was started during the month of Aug 201 and the ground floor has been completed.

- Dr.Ambedkar Govt. Law College, Puducherry is the first College at all India level to conduct a Moot Court Competition exclusively for the women during Octobler 2017.

- Construction of a new Students' utility block with an estimate of Rs.1.50 Cr. is completed during the month of Nov 2017at Dr.Ambedkar Govt. Law College, Puducherry.

- Pondicherry Engineering College, Puducherry ranked 38$^{th}$ at all India level by the National Institute of Ranking Framework (NIRF) for the year academic year 2016-17 has been selected for the TEQIP-III a Centrally Sponsored Scheme.

- AICTE has approved an amount of Rs.2.00 Cr and released an amount of Rs.1.00 Cr. as 1$^{st}$ installment to Karaikal Polytechnic College, Karaikal during April 2017 towards construction of Hostel for SC/ST students.

- Under the CSS scheme "Community Development through Polytechnics (CDTP)", about 255 persons have been given training under various short term non formal skill development courses such as Tailoring& Embroidering, AC mechanic, Electrician, Computer hardware, Accounting (Tally), DTP, Auto mechanic (4 wheeler driving), Cell Phone tech and Beautician during this financial year 2017-18 at Motilal Nehru Govt. Polytechnic College, Puducherry.

---

**<u>உயர்கல்வி மற்றும் தொழில்நுட்ப இயக்குனரகம்</u>**

<u>01.04.2017 முதல் 31.03.2018 வரையிலான காலங்களில் **குறிப்பிடத்தகுந்த சாதனைகள்**</u>

- பெருந்தலைவர் காமராஜர் நிதியுதவி திட்டத்தின் கீழ் 2017-18 நிதியாண்டில் ரூ.24.11 கோடி செலவிடப்பட்டு 4219 மாணவர்கள் (மருத்துவ மாணவர்கள் – 688, பொறியியல் மாணவர்கள் – 3371 மற்றும் செவிலிய மாணவர்கள் - 160) பயனடைந்துள்ளனர்.

- அரசு உயர்கல்வி நிறுவனங்களில் கல்வியின் தரத்தை உயர்த்தும் நோக்கில் கல்வி தர ஆய்வுகுழு ஜுன் 2017 இல் அமைக்கப்பட்டது இது கல்லூரிகளை ஆய்வு செய்து ஒவ்வொரு வருடமும் தர சான்று அளிக்கும். இந்த குழு அனைத்து 21 கல்லூரிகளிலும் ஆய்வு மேற்கொண்டு ஆய்வு அறிக்கை அரசிடம் சமர்பிக்கப்பட்டுள்ளது.

- புதுச்சேரியிலுள்ள கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் அதிக சேர்க்கை இடங்கள் ஏற்படுத்திட வேண்டுமென்ற பெற்றோர்/மாணவர் கோரிக்கையை நிறைவு செய்யும் வகையில், இந்நிருவாகத்தின் முயற்சியால் இந்த கல்வியாண்டில் (2017-18) 1069 இளநிலை மற்றும் 159 முதுநிலை சேர்க்கை இடங்கள் பல்வேறு அரசு மற்றும் சொசைட்டி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் உருவாக்கப்பட்டு, அதிக மாணவர்கள் தாங்கள் விருப்ப பாடங்களை படிப்பதற்கு வழிவகை செய்யப்பட்டது. இதில், அதிகளவிலான தேவையை கருத்தில் கொண்டு, புதுச்சேரி, பாரதிதாசன் அரசு மகளிர் கல்லூரியில் 566 கூடுதல் சேர்க்கை இடங்கள் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், ஷிப்ட் முறை இந்த கல்வியாண்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- அரசு கல்லூரிகளில் 159 ஆசிரியர் காலிபணியிடங்களை நிரப்ப மத்திய தேர்வாணையத்திடம்(UPSC) கோரப்பட்டதில் 147 நபர்களை தேர்வு செய்து அறிவித்தது. இவர்களில் 116 நபர்களுக்கு பணிநியமன ஆணை வழங்கப்பட்டு 89 நபர்கள் 2017-18ல் கல்லூரிகளில் பணியில் சேர்ந்துள்ளனர்.

- புதுச்சேரி பகுதியில் உள்ள 10 அரசு மற்றும் சொசைட்டி கல்லூரிகளில் ( கலை மற்றும் அறிவியல், பொறியியல், பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் சட்டக் கல்லூரி) கடந்த நவம்பர் 2017 முதல், ஒரு புதிய முயற்சியாக “வழிகாட்டி அமைப்பு”(Mentor System) திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதன் மூலம், ஒவ்வொரு ஆசிரியரும் 10 முதல் 15 மாணவர்களை தேர்ந்தெடுத்து அவர்களின் கல்வித்திறன் மேம்பாடு, தகவல் பரிமாற்றத் திறன்

மேம்பாடு, நற்பண்புகள் மேம்பாடு உள்ளடக்கிய ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு வழிகாட்டுவதுடன் இடையூறாக உள்ள அனைத்து தடைகளையும் களைய வழிமுறைகளை காண உதவுகின்றனர்.

- காரைக்கால், அறிஞர் அண்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மூன்று புதிய பாடப்பிரிவுகள் M.Sc (வேதியியல்), M.Sc (கணிதம்) மற்றும் M.Sc (கணிணி) இந்த கல்வியாண்டில் (2017-18) தொடங்கப்பட்டுள்ளது.

- ரூ.2.38 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்பட்ட காரைக்கால், ஔவையார் அரசு மகளிர் கல்லூரிக்கான கூடுதல் கட்டிடம் முடியும் தருவாயில் உள்ளது.

- ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் MPLAD நிதியில் தொடங்கப்பட்ட புதுச்சேரி, தவளக்குப்பம், ராஜீவ் காந்தி கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கான கட்டிடம் முடியும் தருவாயில் உள்ளது.

- ரூ.3.01 கோடி மதிப்பீட்டில் ஏனாம், டாக்டர். SRK அரசு கலைக் கல்லூரிக்கான கூடுதல் வகுப்பறைகள் கட்டும் பணி கடந்த ஆகஸ்ட் 2017ல் தொடங்கப்பட்டு தரைதளம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

- புதுச்சேரி, Dr. அம்பேத்கார் அரசு சட்டக் கல்லூரியில் இந்தியாவிலேயே முதல் முறையாக மகளிர் மட்டுமே பங்குபெறும் மாதிரி நீதிமன்ற போட்டி கடந்த அக்டோபர் 2017ல் நடைபெற்றது.

- ரூ. 1.50 கோடி மதிப்பீட்டில் மாணவர் பயன்பாட்டுக் கட்டிடம் Dr. அம்பேத்கார் அரசு சட்டக் கல்லூரியில் கடந்த நவம்பர் 2017ல் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. (தபால், வங்கி, மருந்தகம், உணவகம், NSS மற்றும் முன்னாள் மாணவர் சங்க சேவைகள்)

- கடந்த 2016-17 ஆண்டில் NIRF (National Institute of Ranking & Framework – ரேங்கிங் மற்றும் கட்டமைப்புக்கான தேசிய நிறுவனம்) பட்டியிலில் அகில இந்திய அளவில் 38வது இடம் பிடித்த பாண்டிச்சேரி பொறியியல் கல்லூரி மத்திய உதவித் திட்டமான (CSS) TEQIP –IIIல் தேர்வாகியுள்ளது.

- காரைக்கால் பாலிடெக்னிக் கல்லூரியில் SC/ST மாணவர்களுக்கான விடுதி கட்டுவதற்கு, AICTE ரூ.2.00 கோடி ஒப்புதல் அளித்து முதல் தவணையாக ரூ.1.00 கோடி ஏப்ரல் 2017 இல்வழங்கியுள்ளது.

- நடுவண் அரசின் உதவிதிட்டத்தின் (CSS) “CDTP” கீழ் மோதிலால் நேரு பாலிடெக்னிக் கல்லூரியில் 255 பயனாளிகளுக்கு தையல், AC பழுது நீக்குதல், எலக்ட்ரீஷியன், கணிப்பொறி வன்பொருள், கணக்கு (டாலி), DTP, ஆட்டோமெக்கானிக் (நான்கு மற்றும் மூன்று சக்கரம்), கைப்பேசி தொழில்நுட்பம், அழகுக்கலை போன்ற பயிற்சிகள் 2017-18 நிதியாண்டில் அளிக்கப்பட்டுள்ளது.